[1978 மார்ச் 10

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவருக்காக நான் பதில் சொல்லக் கூடாது என்று விதியில்லை. இம்மாதிரி யாருக்கும், யாரும் பதில் சொல்லலாம். இது நிரந்தர ஏற்பாடா, தற்காலிக ஏற்பாடா என்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்குப் பதில் தாற்காலிக ஏற்பாடு.

வளையங்குளம் வட்டாரத்திற்குப் பாசன வசதி

* **வினா 484.—திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளம் வட்டாரத்தைச் சார்ந்த 30 கிராமங்களுக்குப் பாசன வசதிக்கென நிலையூர் வாய்க்கால் சிந்தாமணி பேரணை இவைகளிலிருந்து ஒருகால் கொண்டுவர இந்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இதற்கான முதல்நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத் திட்டம் இந்த ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள இயலும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்ப உதவியாளர் சம்பளம்.

***வினா 485. திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடித்து சிவில் இன்ஜினியரிங் சப்ஜெக்ட் படித்தவர்கள் தொழிநுட்ப உதவியாளர்கள் என்ற பெயரில், பணி ஆய்வாளர்களை விட உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்களுக்குப் பணி ஆய்வாளர் சம்பளம் வழங்கப்படும் தவறான போக்கு அரசின் கவனத்திற்கு வந்ததா ?